## கலை, வர்த்தகக் கல்லூரி
## (C. C. A.)

வெலிங்டன் சந்திக்கருகாமையில், யாழ்ப்பாணம்.

**புதிய பிரிவு: A/L 92**

ஆரம்பம் 01 - 06 - 1991
காலை 8-00 மணி

**DAY CLASS**

ஆரம்பம்: 03 - 06 - 1991
காலை 8 - 00 மணி

[இ-0049]



## I. D. P.
## COMPUTER CENTRE

I. D. P.
கம்பியூட்டர் பயிற்சி நிலையம்
பிரதான வீதி, மானிப்பாய்.
[மருத்துவ மனைக்கு அருகாமையில்]

அடுத்த புதிய வகுப்புகள் பின்வரும் நெறிகளில்
01 - 06 - 1991 சனிக்கிழமை
காலை 9 30 மணிக்கு ஆரம்பமாகின்றன!

1. BASIC 2. d BASE III +

பயில விரும்பும் மாணவர்கள்
வியாழன், வெள்ளி 01 - 06 - 1991 க்குமுன்
பதிவு செய்து கொள்ளவும்.

ச, தனையசிங்கம்,
Managing Director

[இ 0063]


## மற்றொரு சிறுமியும் பலி

தென்மராட்சி, மே 30
முந்திரிகைப் பழம் சாப்பிட்டதாகக் கருதப்படும் மற்றொரு சிறுமியும் வயிற்றுளைவின் காரணமாக நேற்று முன்தினம் மரணமானார்.

கொடிகாமம் பாலாவி தெற்கைச் சேர்ந்த த. கௌசிகா [வயது 5] என்னும் சிறுமியே பலியானவராவார்.

அண்மையில் மிருசுவிலைச் சேர்ந்த சிறுமி ஒருவரும் முந்திரிகைப் பழம் சாப்பிட்டதால் மரணமானது தெரிந்ததே. [த-117]

## படையினர் சூடு; சிறுவன் பலி

மட்டக்களப்பு மாவட்டம், கொக்கட்டிச்சோலையில் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பத்து வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## கேந்திர வியாபார நகராக மாறி வருகிறது வவுனியா

வவுனியா, மே 30
வடபகுதிக்குப் பொருட்களை எடுத்துச் செல்வதில் இருந்துவந்த கெடுபிடிகளைப் படையினர் ஓரளவு தளர்த்தியதை அடுத்து வவுனியா ஒர் முக்கிய வியாபார நகராக மாறிவருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடபகுதி வரும் பயணிகளும், வியாபாரிகளும் பொருள்களைப் பெருமளவு கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளதால், சில வர்த்தகர்கள் மண்எண்ணெய் போன்ற பொருள்களைக் கூடுதல் விலைக்கு விற்க முயற்சித்தனர் என்று கூறப்படுகின்றது.

கடந்த 27ஆம் திகதி லீற்றர் மண்ணெண்ணெயை 20 ரூபா முதல் 25 ரூபாவரை விற்ற சில வர்த்தகர்களைப் பொலிஸார் விசாரணை செய்து கூடுதலாக அறவிடப்பட்ட பணத்தையும் வர்த்தகர்களிடம் இருந்து வாங்கிக் கொடுத்தனர் என்று கூறப்படுகிறது.

இதனை அடுத்து மண்எண்ணெய் கட்டுப்பாட்டு விலைக்கு மீண்டும் விற்கப்பட்டது.

பெரும்பாலான மக்கள் கடைகளின் பற்றுச்சீட்டுகளைத் தேடி அலைவதையும் காணக் கூடியதாக இருந்ததாம்.

## எதியோப்பியாவில் ஆட்சி, கிளர்ச்சிப் படையினரிடம்!

எதியோப்பியாவின் ஆட்சிப் பொறுப்பை பிரதான கிளர்ச்சிப் படையான எதியோப்பிய ஜனநாயக மக்கள் முன்னணி ஏற்றுள்ளது.

விரைவில் ஏனைய கிளர்ச்சிக் குழுக்களுடன் பேச்சுக்கள் நடத்தி பரந்த அடிப்படையிலான அரசு ஒன்றை அமைக்கப் போவதாக இம் முன்னணியின் தலைவர் திரு. செனாவி அறிவித்திருக்கிறார்.

இதனிடையில் - பதவி கவிழ்க்கப்பட்ட அரசின் படைகளில் பணி புரிந்தவர்களில் பெரும்பாலோர் அயல்நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-எ]


PALAM

அன்புடன் அழைக்கின்றோம்!

## மகிழ்ச்சிகரமான ஆரம்பம்

31-05-1991 வெள்ளிக்கிழமை
காலை 10 00 மணிக்கு

"பாலம்" பொதுப் பணி மன்றத்தின்

## ★ உணவகம் ★

572, மருத்துவமனை சாலை, யாழ்ப்பாணம்.

இயற்கை சூழல், சுவாத்தியம், நிறைந்த குடிவில் தரம், சுவை, சுத்தம், நிறைந்த உணவு தின்பண்டங்கள், கூழ்வகைகள், கஞ்சிவகைகள், பழங்கள், பழரசங்கள், தேனீர், பால், காலை, மதியம், மாலை உணவுகள்

மக்களுக்காக!

- ✶ தங்குமிட வசதிகள் (சத்திரம்)
- ✶ நியாய விலையில் உணவுகள்
- ✶ பாதிக்கப்பட்டவர்களுக்கான வழிகாட்டல்
- ✶ நோயாளர் துயர் துடைக்கும் பணி
- ✶ மண்ணுக்கு உகந்த விதத்தில் மண்ணுக்கு விசுவாசமான இருசார் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான ஆலோசனை வழங்கல்

இந்த மண்ணை நம்பி இந்த மண்ணின் மக்களுக்காக ஆரம்பமானது
"பாலம்"
உங்களது அன்பான வரவை எதிர்பார்க்கிறோம்

நன்றி ... வணக்கம்

— பாலம் —
[17001]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாலசுப்பிரமணியம் கனகம்மா

திருமதி பா. கனகம்மா 29-5-91இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், தெய்வேந்திரம், சர்வானந்தன், சறோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பம், சின்னம்மா, காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரஞ்சன், சுதா, அகிலா, தர்மேந்திரா, நிதாசரன், சுகனியா, சுதாகரன், வெயிரிந்தா, கவிதா, காலஞ்சென்ற தனராஜ் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-5-91 வியாழக்கிழமை (இன்று) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பா, சர்வானந்தன் [மகன்]

698/6, சபாபதி வீதி,
தலையாழி,
கொக்குவில். [17002]

### செல்லத்தம்பி அம்பிகைபாகர்

தாவடி தெற்கு கொக்குவிலைச் சேர்ந்த திரு செல்லத்தம்பி அம்பிகைபாகர் 29 - 5 - 91 இல் காலமானார்.

அன்னார் பொன்னம்மாளின் அன்புக் கணவரும், பாக்கியலட்சுமி, ஏத்தாபரணம், காலஞ்சென்ற மகாதேவா, மகேஸ்வரி, பேரின்பமணி [B A ஆசிரியை கொக்குவில் இந்துக்கல்லூரி] ஆகியோரின் அருமைத் தந்தையும், பொ நடராசா (சே இடர்) அ. சுப்பிரமணியம், ம. செல்லம்மா, வி, கனகசபாபதி [அதிபர் சி சி த. க பாடசாலை] அ. சாந்தராசா [காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத் தாபனம்] ஆகியோரின் மாமனாரும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (30 - 5 - 91) காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ந இராசேந்திரம் (பேரன்)

தாவடி தெற்கு,
கொக்குவில்.
[16960]

### தியாகி கோ. இராஜகோபால்

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட இலங்கை மக்களுமாகிய தியாகி. கோ. இராஜகோபால் [காந்தி] 02-05-91 இல் தமிழ்நாடு - ஈரோட்டில் இறைபதம் எய்தினார். இவர் காந்திமதி [பாப்பா] யின் அன்புக் கணவரும், தாமோதரனின் அருமைத் தந்தையுமாவார். அன்னாரது இறுதிச் சடங்குகள் 03-05-91 இல் ஈரோட்டில் நடைபெற்றன.

தகவல்:
இரா. கெங்காதரன்
(பெறாமகன்)

"இரமணோதயம்"
36, கன்னியாபுரம்,
உவர்மலை,
திருகோணமலை. [16947]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
சினிவாசகம் பரராஜசேகரம்பிள்ளை
(பரராஜசிங்கம்)

தோற்றம்: 17 - 08 - 1926
மறைவு: 30 - 04 - 1991

அன்பின் திருவுருவே! சேர்ந்தவர்களுடன் நல் மனத்துடன் பழகி திடீரென ஆறாத்துயரில் எம்மை யெல்லாம் நட்டாற்றில் விட்டு, சிவபதம் அடைந்தீரோ!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்
மருமகன்-குலசிங்கம் (நீர்ப்பாசனத் திணைக்களம் மட்டக்களப்பு)

கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு,
உடுவில். [இ-0064]

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கனகசபை தனபாலசிங்கம்
(செட்டி)

தோற்றம்: 06 - 09 - 195
மறைவு: 30 - 05 - 1985

திதி: 05 - 06 1991

எங்கள் அன்புச் செல்வமே நீ
பிரிந்து ஐந்து ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவு என்றும்
எங்களை விட்டு அகலாது!
உன் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, அண்ணா, அக்காமார், அத்தான், தம்பி, மைத்துனர், மருமக்கள்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய். [16961]

இலங்கையில் திரு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 368/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30 - 05 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org